
# புதியதோர் படைப்பிற்காக ஒவ்வொரு இடத்திலும் எழுச்சிப் பெற வேண்டிய யுகசக்தியின் ஸ்வரூபம்




நல்லெண்ணங்களும், நல்ல விருப்பங்களும் கொண்ட, எல்லா இனத்தையும் சேர்ந்த, செயல் திறனுள்ள ஆண், பெண் திரளான மக்கள்

**காயத்ரீ தீர்த்தம் ஷாந்திகுஞ்ஜ், ஹரித்வார்**

## யுக மேம்பாட்டு நல்லுறுதிமொழி

எந்த யுக மேம்பாட்டுப் படையெடுப்பைக் கைக்கொண்டு காயத்ரீ பரிவார அங்கத்தினர்கள் நம்பிக்கை மற்றும் திறனுடன் முன்னேறிச் செல்கிறார்களோ, அதன் விதை யுகரிஷி, வேதமூர்த்தி, தபோநிஷ்டர், பண்டிதர் ஸ்ரீராம் சர்மா ஆச்சார்யா அவர்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நல்லுறுதிமொழி ஆகும். இது நமது முயற்சிகளுக்கு ஒரு நிச்சயமான முன்வரைவு அறிவிப்புப் பத்திரம் ஆகும். இதன் அடிப்படையில் தான் நமது எல்லா கருத்துக்களும், திட்டங்களும், செயல்விதிகளும், நடவடிக்கைகளும் நடைபெறும். இதன் ஒவ்வொரு கோட்பாடும் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் மற்றும் தேசத்தை முற்றிலுமாக மாற்றுகின்ற அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. ஒருமைப்பாடு மற்றும் சமத்துவத்தின் முழுமையான வடிவம், வஸுதைவ குடும்பகத்தின் முழுமையான ஒட்டுமொத்த முயற்சி இதில் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புப் பத்திரத்தை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆழ்ந்து சற்று சிந்திக்க வேண்டும். நமது வாழ்க்கையை இந்த அச்சுப் படிவத்தில் தான் அமைக்க வேண்டும் என்று நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு உபதேசம் செய்வதற்குப் பதிலாக இந்த சங்கல்ப பத்திரத்தின் ஆன்மிக மேம்பாட்டில் முழுக் கவனத்தையும் மையப்படுத்த வேண்டும். ஒவ்வொரு நல்ல மனிதராகச் சேர்ந்துதான் ஒரு நல்ல சமுதாயம் அமையும்.

யுக மாற்றத்திற்காக தேவைப்படும் அவதாரம் முதலில் விருப்பத்தின் அடிப்படையில் தான் மேம்படச் செய்யும். இந்த அவதாரத்தின் நுண்ணிய வடிவம் யுக மேம்பாட்டு நல் உறுதி மொழியே ஆகும்.

### நிதானமாகவும், புரிந்துகொண்டும், ஆர்வத்தோடு தினமும் படிக்கவும், யுக மேம்பாட்டிற்காக சிறப்பு வாய்ந்த உறுதிமொழி

- நாம் இறைவனை எங்கும் நிறைந்தவராக, பரம்பொருளாக ஏற்றுக் கொண்டு, அவருடைய கட்டளைகள் வாழ்வில் கொண்டு வருவோம்.
- உடலை இறைவனின் கோயிலாகக் கருதி ஆன்மிகக்

கட்டுப்பாடு, ஒழுக்கம் இவற்றின் மூலம் ஆரோக்கியத்தைப் பேணுவோம்.

- மனதை தீய எண்ணங்கள் மற்றும் தீய உணர்வுகளில் இருந்து காப்பதற்காக சுய படிப்பு மற்றும் நல்லோர் நட்பை ஏற்படுத்திக் கொள்ளுவோம்.
- புலனடக்கம், செல்வக் கட்டுப்பாடு, நேரக்கட்டுப்பாடு, எண்ணக்கட்டுப்பாடு இவற்றை எப்பொழுதும் பயிலுவோம்.
- நம்மை நாமே சமுதாயத்தின் ஒரு பிரிக்க முடியாத அங்கமாக ஏற்றுக் கொள்வோம். மேலும் எல்லோரது நலனே நமது நலன் என்று எண்ணுவோம்.
- நல்லொழுக்கத்தைக் கடைபிடிப்போம். விலக்கப்பட்டவற்றில் இருந்து காத்துக் கொள்வோம். குடிமக்களின் கடமைகளைச் செய்திடுவோம். நல்ல குடிமகனாக மாறிடுவோம்.
- அறிவு, நேர்மை, கடமையுணர்வு, துணிச்சல் இவற்றை வாழ்வின் பிரிக்க முடியாத அங்கமாக ஏற்றுக்கொள்வோம்.
- சுற்றிலும் இனிமை, தூய்மை, எளிமை, மேன்மை இவைகள் கமழும் சூழலை உருவாக்குவோம்.
- அநீதியால் கிடைக்கும் வெற்றியை விட நீதியோடு நடப்பதால் வரும் தோல்வியை சிரமேற் கொள்வோம்.
- மனிதனின் மதிப்பின் உரைகல்லாக அவனது வெற்றிகள், தகுதிகள் மற்றும் செல்வ வளங்கள், அல்ல. அவனது நல்லெண்ணங்கள் மற்றும் நற்செயல்களை வைத்து எடைப்போடுவோம்.
- நமக்குப் பிடிக்காத வகையில் மற்றவர்களிடம் நடந்து கொள்ளமாட்டோம்.
- ஆணும், பெண்ணும் தூய பார்வையுடன் பழகுவோம்.
- உலகில் நல்லியல்புகளின் புண்ணியம் பரவிட நமது நேரம், திறமை, அறிவு, வலிமை மற்றும் செல்வம் இவற்றின் ஒரு பகுதியை நிர்ணயித்தபடி ஈடுபடுத்துவோம்.
- பாரம்பரியத்தின் ஒப்பீட்டில் அறிவுக்கு முதன்மை இடம் தருவோம்.

- நல்லோரை ஒன்று திரட்டுவது, அநீதிக்கு எதிராக ஆயுதம் எடுப்பது, புதிய படைப்பின் செயல்முறைகள், இவற்றில் முழுப்பலன் காண்போம்.
- நாட்டின் ஒற்றுமை மற்றும் சமத்துவம் இவற்றில் ஈடுபாட்டோடு இருப்போம். ஜாதி, பால், மொழி, ப்ரதேசம் சம்பிராதயம் இவற்றின் காரணமாக ஒருவருக்கொருவர் வேற்றுமை உணர்வுகளோடு நடந்து கொள்ள மாட்டோம்.
- மனிதனது விதியின் மேம்பாட்டுக்குரியவன் அவனே. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் நாமும் மேன்மையுறுவோம். மற்றவர்களையும் உன்னதமானவர்களாக்குவோம் என்பது நமது நம்பிக்கை, இதனால் யுகம் கண்டிப்பாக மாறும்.
- நாம் மாறிடுவோம் – யுகம் மாறிடுமே, நாம் திருந்திடுவோம் – யுகம் திருந்திடுமே. இந்தக் கருத்தில் நமக்கு முழு நம்பிக்கை உள்ளது.

## யுக நிர்மாணத் திட்டம் - ஒரு பார்வை

காயத்ரீ பரிவாரம்/ப்ரக்ஞா (மெய்யறிவுப்) பரிவாரம்/யுக நிர்மான (யுக மேம்பாட்டுப்) பரிவாரம்

யுக நிர்மாணத் (யுக மேம்பாடுத்) திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தவும் உலகமெங்கும் பரவச் செய்யவும். பரிவார விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்ட ஆக்கபூர்வமான கூட்டமைப்பு, காயத்ரீ உபாஸனையின் அடிப்படையில் காயத்ரீ பரிவாரம் (காயத்ரீ குடும்பம்) என்றும், தனி மனிதத் தூய்மைக்காகத் தேவைப்படும் தொலைநோக்கு அறிவின் அடிப்படையில் ப்ரக்ஞா பரிவாரம் (மெய்யறிவுக் குடும்பம்) என்றும், மனிதர்களின் முழுமையான புதிய மேம்பாட்டுக்கான கட்டுப்பாட்டின் அடிப்படையில் யுக நிர்மாண பரிவாரம் (யுக மேம்பாட்டுக் குடும்பம்) என்றும் கூறப்படுகிறது.

லக்ஷியம் மற்றும் உத்தேசம்

- மனிதனில் தெய்வத் தன்மையின் உதயம், பூமியில் ஸ்வர்கத்தின் உருவாக்கம்.
- தனிமனித மேம்பாடு, குடும்ப மேம்பாடு, சமுதாய மேம்பாடு.
- ஆரோக்கியமான உடல், தூய்மையான உள்ளம், நல்ல சமுதாயம்.

- எல்லா உயிர்களிலும் ஆத்மாவைக் காணல், வஸுதைவ குடும்பகம் (யாவரும் கேளிர்)
- ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு தர்மம், ஒரு நீதி
- ஆண்-பெண் வேறுபாடு, ஜாதி வேறுபாடு, குல வேறுபாடு இவற்றில் இருந்து விடுபட்டு, எல்லோரும் சம அந்தஸ்துடன், நல்லிணக்கம் வளர்வதற்கான வாய்ப்பு.

**திட்டத்தின் அறிவிப்பாளர் - பரப்புவர்**

- யுகரிஷி வேதமூர்த்தி தபோநிஷ்டர் பண்டிதர் ஸ்ரீராம் சர்மா ஆச்சார்யா மற்றும் வணகத்துக்குரிய அன்னை பகவதி தேவி சர்மா.
- கூர்மையான மெய்யறிவு, கண்ணீர் தோய்நத சிரத்தை

மூன்று பொருத்தமான விதிமுறைகள்

- திட்டம் - சக்தி - ஈஸ்வரனுடையது
- விதிமுறை - காப்பு - ரிஷிகளுடையது
- இலட்சியப்பயன் - ஒத்துழைப்பு - நல்ல மனிதர்களுடையது

ஆன்ம மேம்பாட்டுக்கான இரண்டு கோட்பாடுகள்

- மேன்மைமிகு எண்ணங்கள், முன்மாதிரிச் செயல்பாடுகள்
- எளிய வாழ்க்கை - உயர்ந்த சிந்தனை

நமது அடிப்படையான நிகழ்ச்சி நிரல்

- அறப்புரட்சி, அறிவுப் புரட்சி, சமூகப்புரட்சி
- அறவழியின் அடிப்படையிலான பல்வேறு சிறப்பான வழிகளில் மக்கள் கல்வி
- காயத்ரீ - கூட்டு அறிவாக்கம், யாகம் ஒத்துழைப்புடன் கூடிய நற்செயல்கள்.

நமது அறிவிப்பு

- நாம் மாறிடுவோம் - யுகம் மாறிவிடுமே. நாம் திருந்திடுவோம் - யுகம் திருந்திவிடும்.
- இருபத்தொன்றாம் நூற்றாண்டு - ஒளிமயமான எதிர்காலம்.
- அனைவருக்கும் தொண்டு - அனைவரிடமிருந்தும் உழைப்பு

நமது சின்னம்

- ஒளிமிக்க செஞ்சுடர், முழு உலக புரட்சிக்கான கூட்டு வலிமை மிக்க முயற்சி – யுக சக்தியின் வளர்ச்சி.

நமது அமைப்பு முறைச்சட்டசம்

- யுக மேம்பாட்டுத் திட்ட நல்லுறுதிமொழிக்கான 18 கோட்பாடுகள்.

நமது திடமான ஏற்புடைமைகள்

- மனிதனது விதியின் மேம்பாட்டுக்குரியவன் அவனே.
- யார் எவ்வாறு சிந்திக்கிறார்களோ, எவ்வாறு நடக்கிறார்களோ, அவ்வாறே ஆகிறார்கள்.
- ஆணும், பெண்ணும் ஒருவருக்கொருவர் போட்டியாளர்கள் அல்ல, முழுமையான ஒத்துழைப்பு தருபவர்கள்.

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் இலக்கிங்கள், இலட்சியங்கள்

- புரட்சி தர்மத்தின் இலக்கியங்கள், இலட்சியங்கள்

வாழ்வு மேம்பாட்டுக்கான நான்கு கோட்பாடுகள்

- ஸாதனை (துவம்), ஸ்வாத்யம் (சுய கல்வி) ஸம்யம் (கட்டுப்பாடு), ஸேவை (தொண்டு)

ஆன்மிக வாழ்விற்கான மூன்று அடிப்படைகள்

- உபாஸனை (வழிபாடு), ஸாதனை (துவம்), ஆராதனை (தொண்டு)

வளமான வாழ்விற்கு நான்கு பாத்திரங்கள்

- அறிஞன், நேர்மையானவன், கடமையுணர்வுள்ளவன், துணிச்சலுள்ளவன்

திறமைமிகு வாழ்வின் நான்கு தூண்கள்

- புலனடக்கம், செல்வக் கட்டுப்பாடு, நேரக்கட்டுப்பாடு சிந்தனைக் கட்டுப்பாடு.

ஆன்மிக வளர்ச்சிக்கு நான்கு பாதங்கள்

- ஆத்ம சோதனை, ஆத்ம சீர்திருத்தம், ஆன்மிக மேம்பாடு, ஆன்மிக முன்னேற்றம்

குடும்ப மேம்பாட்டிற்கான ஐந்து ஒழுங்குமுறைகள்

- உழைப்பு, பணிவு, கட்டுப்பாடான செலவு, சீரமைப்பு,

ஒத்துழைப்பு

மூன்றையும் தூய்மையாக்குவோம்

- பரு உடல், நுண் உடல், காரண உடல்

மூன்றைத் தவம் செய்வோம்

- ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம்

மூன்றை மனநிறைவுள்ள ஒத்திசைப்பு செய்வோம்

- உணர்வு, எண்ணம், செயல்பாடு

மூன்றை வளர்ப்போம்

- சிரத்தை, மெய்யறிவு, ஈடுபாடு

மூன்றைத் திருத்துவோம்

- குணம், செயல், இயல்பு

மூன்றைச் சமாளிப்போம்

- எண்ணம், நடத்தை, நடவடிக்கை

மூன்றை துறப்போம்

- லோபம் (பேராசை), மோஹம், அஹங்காரம்
- மனக்குரோதம், பேராவல், அஹந்தை
- மக்கட் செல்வ ஆசை, பொருட் செல்வ ஆசை, புகழ்–பெயர் ஆசை

மூன்றை ஏற்போம்

- ஓஜஸ், தேஜஸ், வர்ச்சஸ், (புற ஒளி, உள் ஒளி, ஆத்ம ஒளி)

மூன்றை மதிப்போம்

- மஹான்கள், சீர்திருத்தவாதிகள், உயிர்த் தியாகிகள்

ஏழுப்புரட்சி இயக்கங்கள்

- ஸாதனை (பயிற்சி), கல்வி, ஆரோக்கியம், சுயதொழில், பெண்கள் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல், தீய பழக்கங்களில் இருந்து விடுதலை, மற்றும் தவறான நடவடிக்கைகளை அழித்தல்.

மூன்று திட்டங்கள்

- பிரச்சார வடிவமானது, ஆக்க பூர்வமானது, போராட்ட வடிவமானது

பிரச்சார வடிவமான திட்டம்

- எல்லா மக்களுக்கும் யுக மேம்பாட்டுத் திட்டத்தின் செய்தியை எடுத்துச் செல்வது.

ஆக்க பூர்வமான திட்டம்

- புதிய படைப்பின் தனித் திறமைகளுக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு.

போராட்ட வடிவமான திட்டம்

- படைப்பு வழியில் வரும் தடைகளைத் தகர்த்தல்

அகில உலக காயத்ரி பரிவார்
ஷாந்திகுஞ்ஜ், ஹரித்வார் (உத்தரகாண்ட்) 249 411.
செல் : +91 92583 60651
இ-மெயில் : south@awgp.in வெப்சைட் : www.awgp.org

**"அஸ்வமேத காயத்ரி மஹா யாகம்"**
**உங்களை அன்புடன் வரவேற்கிறது**
**2016 ஜனவரி 28 முதல் 31 வரை**
**இடம் : விவேகானந்தா கேந்திரம், கன்னியாகுமரி, தமிழ்நாடு, தென்னிந்தியா**
இ-மெயில் : gck.kanyakumari@awgp.in (கோ ஆர்டினேட்டர்)

## GAYATRI PARIWAR TAMILNADU CENTERS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Chennai | : | 9003149639, 9962929214 | Nagercoil | : | 8939353511, 9362823000, 9442365447, LL : 04652-230447 |
| Coimbatore | : | 9442334658, 9629868215 | | | |
| Erode | : | 9443340509, 9962101366 | Salem | : | 9443697145, 9345763347 |
| Jolarpet | : | 9443151947, 9443556702 | Tambaram | : | 9789081148, 9789883921 |
| Kanchipuram | : | 8939353511, 9444914836 | Tirupur | : | 9789402824, 9994218924 |
| Madurai | : | 944290000, 9344100600 | Tuticorin | : | 8903516632 |
| Marthandam | : | 9443145332, 9443148688 | Tirunelveli | : | 9894947517, 9952052410 |

